மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக, ஆலைகளுக்குப் போதிய பஞ்சு கிடைக்கக்கூடிய வழி வகைகளைக் காண்பதற்காகச் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு முயற்சி, இன்றைக்குச் செய்தியாக வந்திருப்பதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் பட்ட சட்டமோ, கட்டுப்பாடோ வருமானால், அது எந்த அளவுக்கு ஆலைகளுக்குச் சாதகமாக இருக்கும் அல்லது பாதகமாக இருக்கும் என்பதையெல்லாம் மத்திய அரசாங்கம் பரிசீலிக்கும் என்று நான் நம்புகிறேன். ஆலைகளுக்குப் பஞ்சு தடங்கல் இல்லாமல் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, பஞ்சை சில பேர் பதுக்கி வைக்க இடமிருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுப்பதாகத் தெரிகிறது. நிச்சயம் ஆலைகளுக்குப் பாதகமாக எந்த நடவடிக்கையையாவது மத்திய அரசாங்கம் எடுக்குமானால், நமது மாநில அரசு ஆலைகள் சிறந்த முறையில் தடையில்லாமல் நடக்கவும் பஞ்சு கிடைக்கவும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கும்.

VI. MOTION FOR SUSPENSION OF RULE 42 OF THE COUNCIL RULES

DEPUTY CHAIRMAN : I move—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised today."

The motion was put and carried.

(2) *Failure of the authorities to disburse salary for the month of October 1970 to the staff of Government Arts College for Women, Madras*

THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the failure of the authorities to disburse the salaries to all the members of the staff of the Government Arts College for Women, Madras for the month of October 1970, and may I add that the salary for the month of November 1970 also has not been paid on 26th November 1970.

மாண்புமிகு திரு. எஸ்.மாதவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அண்மையில் அக்டோபர் மாதத்திற்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். அக்டோபருக்கான சம்பளம் நவம்பர் மாதம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நவம்பர் மாதத்திற்குச் சம்பளம் டிசம்பர் மாதம்தான் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அதைப் பரிசீலித்தது. அந்தக் கல்லூரியில் எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுவது தவறு. ஏற்கெனவே இருக்கிறவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டது.

புதிதாக சில ஸ்டாஃப்களை (Staffs) அரசாங்கம் நியமிக்க அனுமதி அளித்தது. அந்த ஆசிரியர்களுக்கு அல்லது வேறு துறையில் பணி யாற்றுகிறவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சம்பளம் அக்டோபர், நவம்பர் மாதம் கொடுக்கப்படாமல் இருந்தது. அதற்கு அரசாங்கத் தின் அனுமதி பெற்று இன்னும் சில நாட்களில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கல்லூரி முழுவதும் பாதிக்கும் சூழ்நிலையில் இல்லை. ஒரு சிலரைப் புதிதாக நியமித்ததால் ஏற்பட்ட தயக்கமே தவிர, வேறு எந்தவிதமான தவறும் நடக்கவில்லை.

THIRU G. VASANTHA PAI : On a point of clarification, Sir. I am told that there are about 18 persons who have not been given their salaries for October 1970, that the salary for November, 1970, due on 26th November 1970, has not yet been paid and that there is an order of the Government that the salary should be paid by the first of December. Will the Hon. Minister see that at least hereafter such hardship is not created to professors and lecturers in an educational institution?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதுதான் முன்னாலேயே சொன்னேன். கல்லூரி முழுவதற்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்று சொல்லக் கூடாது. ஒரு பேராசிரியர், ஏழு அசிஸ்டெண்ட் புரபொசர் கள், இரண்டு ஆங்கில டியூட்டர்கள், மூன்று டெமான்ஸ்ட்ரேடர்கள், நான்கு அட்டெண்டர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் அண்மையில் தங்களுடைய பதவிகளுக்கு ஒப்புதல் பெற்றார்கள். அதாவது 24–9–70 -ல் அரசாங்கத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் உடனடியாக அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றும் சட்டசபையின் அனுமதியைப் பெற்றும் சம்பளம் கொடுக்க வேண்டும். அதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதைத் தவிர்க்க வேண்டு மென்று, கன்டின்ஜென்சி பண்டிலிருந்து உடனடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு மாத காலம் இடைவெளி ஏற்பட்டதே தவிர, பெரிய தவறு எதுவும் நடக்க வில்லை. அதுவும் கல்லூரி முழுவதற்கும் இல்லை. ஒருசில பேர்களுக்கு அந்தப் பதவி புதிதாக உருவாக்கப்பட்டதால் ஏற்பட்டது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

VII. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu Prohibition (Amendment) Bill*, 1970 (*L.A. Bill No. 39 of 1970*)

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்குத் திருத்த மசோதாவை † சட்டமன்றப் பேரவை மசோதா எண் 39/1970 ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த சட்டத்திலே இப்போது அனுமதி வாங்கிக் கொண்டு சில பேர் குடிப்ப தற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. வேறு சில உபயோகத்திற்கு மெடிசினல் பர்ப்பசுக்கு அனுமதி கொடுப்பதற்கும் இப்போதிருக்கிற மூலச் சட்டத்திலேயே இடம் இருக்கிறது. அதே போல இப்போது

†Printed as Appendix I